கருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2020–2021– ஆம் ஆண்டிற்கான தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள உதவி இயக்குநர் நிலை அலுவலர்களுக்கு இணை இயக்குநர் நிலையில் தற்காலிக பதவி உயர்வு மற்றும் பணி நியமனம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை

DIRECTOR OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
28 JUL 2021
CHENNAI-600 015

அரசாணை (வா) எண்.187

நாள்: 27.07.2021
பிலவ, ஆடி 11–ந் தேதி,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (4ப) எண்.01 , ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை நாள்.09.01.2021
(2) அரசாணை (வ). எண்.54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1)துறை நாள்.24.02.2021
(3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண் 93431/2017/ஜி.இ.1.1, நாள் 19.07.2021.

-----

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2020–21–ஆம் ஆண்டிற்கான இணை இயக்குநர் நிலை பணியிடங்களுக்கான தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் 24 நபர்களுக்கு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 16 உதவி இயக்குநர்களுக்கு இணை இயக்குநர்களாகப் பதவி உயர்வு மற்றும் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை எற்று, 3 உதவி இயக்குநர் அலுவலர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டவாறு ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாகப் பதவி உயர்வு மற்றும் பணிநியமனம் வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண். | பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் இடம் (திரு/திருமதி/செல்வி) | பணி வழங்கப்பட வேண்டிய இடம் |
|---|---|---|
| 1. | பி.ஏ.ஜாகிர்உசைன்,<br>உதவி திட்ட அலுவலர் (ஊதிய வேலைவாய்ப்பு),<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>சேலம் மாவட்டம்.<br><br>(10.02.2021 முதல்) | இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>நீலகிரி மாவட்டம்.<br>(திரு.பி.பாபு, இணை இயக்குநர் மாறுதல் பணியிடம்) |
| 2. | எப்.மல்லிகா,<br>உதவி திட்ட அலுவலர் (கணக்கு மற்றும் நிர்வாகம்),<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>தூத்துக்குடி மாவட்டம்.<br><br>(22.02.2021 முதல்) | இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>திருவள்ளூர் மாவட்டம்.<br>(திரு.ஜி.குருநாதன், இணை இயக்குநர் பணியேற்காததால் ஏற்பட்ட காலிப்பணியிடம்) |
| 3. | எஸ்.இலக்குவன்<br>உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு),<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br><br>(08.07.2020 முதல்) | இணை இயக்குர் / மாநில திட்ட மேலாளர் (சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவனக் கட்டமைப்பு) / State Programme Manager (Social Mobilization and Institution Building),<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,<br>சென்னை–34.<br>(திருமதி.எஸ்.செல்வராணி, இணை இயக்குநர் மாறுதல் பணியிடத்தில்) |

2. இணை இயக்குநர்களாக பதவி உயர்வு பெறும் உதவி இயக்குநர்களை அவர்களது பணியிடத்திலிருந்து விடுவிக்கப்படும் முன்பாக அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் அல்லது தண்டனைகள் ஏதுமில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னர் அவர்களை பணியிலிருந்து விடுவிக்குமாறு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. அரசாணை (நிலை) எண்.249, நிதித்(வ.செ.பொ–1) துறை, நாள் 21.05.2020–ன்படி மேற்காண் பணியிடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள் யாரும் இந்த பணியிட மாறுதலுக்கு பயணப்படி கோரக் கூடாது என்ற நிபந்தனையுடன் இவ்வரசாணை வெளியிடப்படுகிறது.

4. மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பணியில் சேர்ந்த தேதி குறித்த விவரத்தினை அரசுக்குத் தெரிவிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. கோபால்,**
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்,
**வழி–** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை–34.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
சம்மந்தப்பட்ட மாவட்ட கரூவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–5/18/35.

**நகல்**
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/அந2/உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.

மே.கு.ந.க. எண்.93431/2017/ஜிஇ1.1
நாள். 29.07.2021.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
சென்னை-15.

அரசாணை (வா) எண்.187, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை, நாள்.27.07.2021 அனுப்பப்படுகிறது

இயக்குநருக்காக

பெறுநர்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள்,
(சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்/அலுவலகத் தலைவர் மூலமாக)

<u>நகல்</u>:-

1. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் /தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம், நீலகிரி, தூத்துக்குடி, திருவள்ளூர், திருநெல்வேலி.
3. மாநில கணக்காயர், சென்னை–18.
4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–18/35.
5. சம்பந்தப்பட்ட மாவுட்ட கருவூல அலுவலர்கள்.
6. இருப்புக்கோப்பு.